# காஞ்சி


அண்ணாதுரை



விலை 20 காசு

4. 12

15-10-67


Ensure a BUMPER CROP every time
with a Kilburns Centrifugal Pumpset
You too can be sure of a rich harvest every time by ensuring adequate, continuous water-supply to your crops with a Kilburns Centrifugal Pumpset (equipped with NGEF/Licence AEG Motor, ERSKINE HEAP Starter, and Kilburn Switch). A wise investment, because it gives you trouble-free service for many years.
Order your Kilburns Centrifugal Pumpset today or write for full particulars.
PUMPSET Of robust construction, with specially designed impeller and shaft and stuffing box, and cast iron base plate to accommodate both pump and motor on the same plane.
MOTOR NGEF/Licence AEG Totally-enclosed, fan-cooled, with 'E' class insulation specially treated for tropical climate.
STARTER ERSKINE HEAP trouble-free Starter.
SWITCH Weather and dust-proof with rewireable type fuse bases and carriers.
Kilburns SPECIALISED SALES ENGINEERS
KILBURN AND COMPANY LIMITED
153, Mount Road, MADRAS-2
39/1A, Jayachamarajendra Road, BANGALORE-2
8570-1-1, Rashtrapathi Road, SECUNDERABAD-3
XXVII/16971, Mahatma Gandhi Road, ERNAKULAM-6
9/128, Cross Cut Road, COIMBATORE-12
KB 3846

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 15—10—67 இதழ் 12

# கிராக்கிப் படி உயர்வு

இந்தக் கிழமை தொடக்கத்தில். தமிழக அரசு தன் அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும், உதவிப் பள்ளி ஆசிரியர்களுக்குமாக கிராக்கிப் படியை உயர்த்தியுள்ளது.

உயர்த்தியுள்ள கிராக்கிப்படித் தொகையை அடுத்த நிதியாண்டுத் தொடக்கம் வரையில் ஒருவகையில் கட்டாயச் சேமிப்பு என்று கூறத்தக்க முறையில் மட்டுமல்லாமல் உடனடியாக ஊதிய உயர்வு காரணமான பண்ட விலைகள் எந்தக் கட்டத்திலும் ஏறிவிடாத படியான ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற வகையிலும் வைப்பு நிதிக் கணக்குடன் அரசு, இணைத்துவிட்டிருப்பதை, வரவேற்றே தீரவேண்டும்.

இது மத்திய அரசு, அண்மையில் தன் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வளித்து, உயர்வுத் தொகையை வைப்பு நிதிக் கணக்கில் வைத்துக் கொள்வதாக அறிவித்தது போன்றதுதான் என்றாலும், விலை உயர்வுத் தடுப்பு நடவடிக்கை என்ற வகையில் இதுபோன்ற ஏதேனும் நடைமுறைகளை மேற்கொண்டுதான் தீர வேண்டும்.

காரணம், ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசும், மாநில அரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் ஊழியர்களுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுப்பதனால், ஏறிவிடுகிற விலை உயர்வின் பயங்கரக் கொடுமையை ஏழை, நடுத்தர மக்கள்—பொதுமக்கள்தான் பெரும்பகுதியும் அனுபவித்துத் தீரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எனவே, கிராக்கிப்படி உயர்வை அடுத்த நிதியாண்டு வரையில் வைப்பு நிதிக் கணக்கில் சேர்த்துக் கொள்வதன் மூலம், இத்தகைய நிலைமைக்குத் தற்காலிக ஏற்பாடு செய்துவிட்டாலும் அடுத்த ஆண்டு முதல், கிராக்கிப்படி நகர ஈட்டுப்படி என்பதன் பேரால் மேலும் பொதுப் புழக்கத்துக்குத் தாராளமாக — சிறுகச் சிறுக வந்துவிடப் போகும் சுமார் 7 கோடி ரூபாய் அளவுக்கு, அதற்கேற்ற வகையில் பண்ட விலைகள் ஏறாமல் இருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு, இந்த இடைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமானால் அரசு ஊழியர்கள் அல்லாத பெரும்பான்மையோரைப் பாதுகாத்த பெருமையை அரசு தேடிக்கொண்டதாக இருக்கும்.

அரசு ஊழியர்களுக்கான கிராக்கிப்படி உயர்வு மட்டுமல்லாமல் சென்னை நகரத்தில் இருக்கின்ற சுமார் 15,000-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படியும் கொடுக்க தமிழக அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 65 லட்சம் ரூபாய்கள் வரையிலும் செலவாகும் என்றும் அறிவிக்கப் பெற்றுள்ளது. நடப்பு ஆண்டில் மட்டும் இந்த இனத்துக்கு சுமார் 25 லட்சம் தேவை என்று தெரிகிறது.

நகர ஈட்டுப்படி கோரிக்கை அரசு ஊழியர்களால் கடந்த நான்கு ஐந்து ஆண்டுக் காலமாகவே விடப்பட்டிருந்தும், திராவிட முன்னேற்றக் கழகம், ஆட்சிபீடத்தைக் கைப்பற்றி அதன் பிறகுதான் கோரிக்கை ஈடேற வேண்டும் என்ற பெருந்தன்மையில் காங்கிரஸ் இது வரையில் இருந்துவிட்டிருக்கிறது.

ஏழு கோடி ரூபாய் அளவுக்கு உயர்வு அளிக்க ஒப்புக்கொண்டிருக்கிற தமிழக அரசு அடுத்த நிதி நிலை அறிக்கையின்போதுதான், இந்த தொகையை எப்படி ஈட்டிக்கொள்ள வழி கண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும் என்றாலும், காணப்படவிருக்கிற வழி முறைகள், பொதுமக்கள்மீது புதிய வரிகளாக இருக்கக்கூடாது என்பதை மக்கள் எதிர்பார்க்கக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுவதில் தவறில்லை என்றே கருதுகிறோம்.

மொத்தத்தில், கிராக்கிப்படி, உயர்வும் நகர ஈட்டுப் படியும் அளித்திருப்பதன் மூலம் அரசு ஊழியர்களில் பெரும்பாலோரை மகிழ்வித்து விட்டது தமிழக அரசு. இதிலும் சொத்தை, சொள்ளை என்று கூறுவோர், எதிலும் சொத்தை, சொள்ளையாக இருப்பவர்களாகத் தான் இருக்கமுடியும் என்ற நம்பிக்கையில், விலை உயர்வுத் தடுப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்பதையும் சொல்லி, உயர்வுத் திட்டத்தை வரவேற்கிறோம். ❋

# அட்லி மறைவு

பள்ளிப் பருவத்தில் அடக்கமாக இருந்துவிட்டு, பட்டம் பெற்று வெளியேறி வக்கீல் தொழிலில் ஈடுபட்டு அதிலிருந்து அரசியல் வாழ்வில் மூழ்கிவிட்டவர்களது வரலாற்றை இந்தியத் துணைக்கண்டம் அடக்கிக் கொண்டிருப்பதைப் போலவே பிரிட்டனும் கொண்டிருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள் உண்டு.

முதலில் வக்கீலாகத் தொழில் ஏற்று அதிலிருந்து அரசியலுக்கு வந்தவர்தான், அண்மையில் காலமான பிரிட்டனின் முன்னாள் பிரதமர் திரு. அட்லி அவர்கள்.

அட்லி அவர்களது அடக்கமான பண்பும் சிந்தனைத் தெளிவான செயலாற்றலும், நுணுக்கமான ராஜ தந்திரபோக்கும், பிரிட்டனது வரலாற்றில் மட்டுமல்ல இந்தியத் துணைக்கண்டத்தின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் கூட—அவருக்கு ஒரு உன்னத இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் சிகரமாக, திரு. அட்லி அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலே தான் இந்தியத் துணைக்கண்டம் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட்டு, விடுதலை பெற்றது என்பதும் இதற்காக அட்லி பட்டபாடு கொஞ்சமல்ல—எடுத்த முயற்சிகள் சாமான்யமானதல்லவென்பதும் தெளிவாகும்.

இந்தியாவைப் போலவே, பிரிட்டனும் கூட அட்லி அவர்களது அரசியல் வாழ்நாளில் பல நன்மைகளையடைந்திருக்கிறது. அவரது மதி நுட்பத்தாலும், பெருந்தன்மையாலும் பிரிட்டன் அடைந்த முன்னேற்றம் மறைக்க முடியாததாகும்.

அன்றாடம், உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் எத்தனையோபேர் தங்கள் வாழ்வைமுடித்துக்கொண்டு, பெரும்பயணத்தில் சென்று கொண்டுதானிருக்கிறார்கள். என்றாலும், அவர்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலரே, வரலாற்றை உண்டாக்கிவிட்டு—புகழைப் பொறித்துக் கொண்டு சாகிறார்கள்!

அந்தச் சிலரில் அட்லியும் ஒருவர்! உலகத்தின் சர்வாதிகாரப் பிடியிலிருந்து, அகிலத்தை விடுவித்த வரது பிரிவுக்கு வையம் வருந்தாமலிருக்க முடியுமா?

# நிகழ்ந்த கதை?

—[நீ. த. வே.]—

பதினைந்து நாட்களுக்கு முன்பு ஒரு சிற்றூர்க்கு அவ்வூரிலுள்ள கிளை அஞ்சலக ஆய்வின் பொருட்டுச் சென்றிருந்தேன். ஆய்வு முடிந்து திரும்புகையில் அங்கே என் நண்பர் ஒருவரைக் கண்டேன். அவர் அந்த ஊருக்குப்பக்கத்தே உள்ள மற்றோர் ஊரில் காவல் துறை ஆய்வாளராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். நெடு நாட்களுக்குப் பின் பார்க்க நேர்ந்ததால் அவர் என்னை விடவில்லை. தம்முடைய வீட்டிற்கு வந்து அன்று இரவு தங்கியிருந்து மறு நாள்தான் போகவேண்டுமென வற்புறுத்தி அழைத்துச் சென்றுவிட்டார்.

அன்று இரவு உணவுக்குப் பின் நாங்கள் இருவரும் எங்கள் மாணவ வாழ்க்கையைப் பற்றி எல்லாம் நினைவுகூர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். பேச்சினிடையே, "நாம் மாணவர்களாக இருக்கையில் கட்டிய எண்ணக் கோட்டைகள் எல்லாம் மண்ணாகிப் போக இன்று நான் ஓர் அஞ்சல் துறை ஆய்வாளராக இருக்கவும் நீங்கள் ஒரு காவல்துறை ஆய்வாளராக இருக்கவுமான நிலை ஏற்பட்டுவிட்டதே!" என்று நான் குறிப்பிட்டேன் "நீங்களாவது ஒரு வகையில் மொழிக்குத் தொண்டாற்றி வருகிறீர்கள். நான்தான் எந்த வகைத் தொண்டும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன்!" என்றார் என் நண்பர்.

"மொழிக்கு நான் தொண்டாற்றுகிறேனா?" என்று வியப்போடு கேட்டேன், "நீங்களாகச் சொல்லாவிட்டாலும் நீங்கள் கதை கட்டுரை எழுதி வருவது எனக்குத் தெரியும், உங்கள் கதைகளையும் கட்டுரைகளையும் தவறாமல் படித்து வருகிறேன். அது மொழிக்கு நீங்கள் செய்யும் ஒருவகைத் தொண்டுதான்" என்றார் நண்பர். "நான் எழுதி வருவது உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று வினவினேன் "எப்படியோ தெரியும். இன்ன புனைப் பெயரில் எழுதி வருவது நீங்கள்தானே!" என்றி அவர் சிரித்துக் கொண்டே கேட்டார். "காவல் துறையோடு ஒற்றர் துறை ஒன்றாக இணைக்கப் பட்டிருப்பது மிகப் பொருத்தமானது தான்!" என்று நான் சிரித்துக் கொண்டே கூறிவிட்டு "நீங்களும் அப்படி ஏதேனும் எழுதித் தொண்டாற்றலாமே!" என்றேன். "எழுதுவதற்கு நேரம் எங்கே இருக்கிறது?" என்று சொல்லிய நண்பர் எழுந்திருந்து ஒரு பேழையைத் திறந்து அதிலிருந்த ஒரு சிறு குறிப்பேட்டைக் கொணர்ந்தார். "இந்தக் கதையைப் படித்துப் பாருங்கள்!" என்று அந்தக் குறிப்பேட்டை என்னிடம் தந்தார். அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். முத்து முத்தாக எழுதப்பட்டிருந்த எழுத்துக்கள். என் நண்பருடையதல்ல எனத் தெரிந்துக்கொண்டேன். "பெண்களின் கையெழுத்துப்போல் தோன்றுகிறதே! உங்கள் துணைவியாரின் கையெழுத்தோ?" என்று கேட்டேன்." இல்லை! முதலில் அதைப் படித்துப் பாருங்களேன்" என்றார் என் நண்பர். தலைப்பு இல்லாமல் எழுதப்பட்டிருந்த அந்தக் கதையை நான் படித்துப் பார்க்கலானேன்.

* * *

"நன்றாக எண்ணிப் பார்த்த பின்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். என் கதையை நானே முடித்துக்கொள்ளப்போகிறேன். ஆறு திங்களுக்கு முன்னமே என் கதை முடிந்திருக்க வேண்டும். ஆனால் எதிர்பாராத வகையிலே என் வழியில் குறுக்கிட்ட என் அண்ணன் அதைத் தடுத்துவிட்டார்.

"என் அண்ணன்!" என்று சொல்லும்போது என் உள்ளம் எல்லாம் இனிக்கிறது. ஆறு திங்களுக்கு முன்வரை அவர் யாரோ? நான் யாரோ? ஆனால் இன்று அவர் என் அண்ணன். நான் அவருடைய தங்கை. என் அண்ணனைவிட்டுப் போவதில் எனக்கு விருப்பமில்லைதான். ஆனால் பாவி என்னால் அண்ணனின் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கப்படுகிறதே! அதை நான் எப்படித் தாங்கிக் கொள்வேன்.. எவ்வளவு உயர்ந்த ஒழுக்கமும் அரிய பண்பும் உடையவர் அவர். அவர் மீதா பழி சுமத்தப் பார்ப்பது? இந்தப் பாழாய்ப்போன ஊருக்கும் உலகத்துக்கும் அவர்மீது பழி கூற எப்படித்தான் மனம் வந்ததோ? நான் அவர் வீட்டில் தங்கியிருப்பதால் அல்லவா அவர்மீது உலகம் பழி சுமத்தப் பார்க்கிறது? நான் போய்விடுகிறேன், என் அண்ணனின் மீது வீண்பழி சுமத்தப்பட வேண்டாம்! அவர் ஒழுக்கத்துக்கு மாசு கற்பிக்கப்பட வேண்டாம்!

இதனை அண்ணனிடமோ அண்ணியிடமோ சொல்லி விடை பெறுவது என்பது முடியாத செயல் என்று எனக்குத் தெரியும். எனவேதான் அவர்களிடம் சொல்லாமலே போய்விடப் போகிறேன். நான் போய்விட்டால் என் அண்ணனும் அண்ணியும் என்னைத் தேடி அலைவர்!—வருந்துவர்! கண்ணீர் விடுவர்! என்பது எனக்குத் தெரியாததல்ல. என்றாலும் நான் போய்விடுவதுதான் நல்லது என்று எனக்குப் படுகிறது.

இந்த அண்ணனும் அண்ணியும் போன்ற ஒழுக்கமுடையவர்களின் மகளாக நான் பிறந்திருக்கக் கூடாதா? ஒழுக்கங்கெட்ட குணக்கேடர்களின் மகளாகவா — நான் பிறக்கவேண்டும்? எங்கள் தமிழ் ஆசிரியர் ஒருவர் திணை பாகுபாடு பற்றி விளக்கியபோது சொன்னார், "திணை என்றால் ஒழுக்கம் என்று பொருள். உயர்ந்த ஒழுக்கமுடையவர்கள் உயர்திணை, மக்களைத் தவிர்த்த ஏனைய எல்லாம் ஒழுக்கம் இல்லாதவை அஃறிணை" என்றார். உயர்திணையாக நல்ல குடும்பங்களிலே பிறந்தவர்கள்தான் என் தாயும் தந்தையும் என்றாலும் எப்படியோ ஏனோ அவர்கள் வாழ்வில் ஒழுக்கம் குடிகொள்ளவில்லை. ஒருவன் ஒருத்தி என்று வாழும் உயரிய ஒழுக்கம் அவர்களிடம் அமையவில்லை. அவர்களிடம் அமையாவிட்டால் போகிறது, தங்கள் வயிற்றில் பிறந்த மக்களாவது ஒழுக்கத்தோடு வாழவேண்டும் என்று எண்ணக் கூடாதா? என் தாய் அப்படி எண்ணுபவளாக இருந்தால், அன்று என்னிடம் தகாதமுறையில் நடந்து கொள்ள முயன்ற தன் தம்பியைக் கண்டித்திருக்க மாட்டாளா? அவனைக் கண்டிப்பதற்கு மாறாக எனக்கல்லவாஅவள் அறிவுரை கூறினாள்?

(13-ம் பக்கம் பார்க்க)

**கதைகள் எழுதப்படுவது மட்டுமல்ல; நிகழ்வதும் உண்டு! இது நிகழ்ந்த கதையோ இல்லையோ — எத்தனையோ குடும்பங்களில் இது போன்ற கதைகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன.**

# நிதானம்

[ மலபார் குமார் ]

விடியற்காலை மணி நான்கு இருக்கும். இன்னும் தூக்கம் வரவில்லை இனி தூக்கமும் வராது. மனத்தளத்தில் கண்ணாடித்தாள்கள் பதிந்துவிட்டதுபோல் வேதனை தரும் நினைவுகள் உறுத்திக்கொண்டிருக்கின்றன. நெஞ்சில் இரத்தம் கசிவது போன்ற உணர்வு. அந்த வேதனை உணர்வுகள் மேலெழும்பி கண்களைக் கலங்கச் செய்கின்றன. கடைக் கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் சதாசிவம். ஜீரணிக்க முடியாத நினைவுகள் ஒன்றல்ல; இரண்டல்ல; கட்டுபபாடற்றுத் தேங்கிவிட்டன. அணு அணுவாகத் தேங்கிவிட்ட வேதனைகள் செல்லரிப்பதுபோல் மனத்தை அரித்துக்கொண்டிருக்கின்றன.

இருள் கப்பிய உறையைக் கண்ணோட்டமிட்டார். ஒரு பொருளும் தெளிவாகத்தெரியவில்லை. மயங்கிய சூழலில் அறைக்குள் எங்கும் ஒரே அமைதி லட்சுமியும் குழந்தைகளும் தூங்கிக்கொண்டிருந்தனர். லட்சுமி, நிம்மதியாக அயர்ந்து தூங்குகிறாள். நிம்மதி என்று சொல்லமுடியாது. ஐந்து பிள்ளைகளைப் பெற்றவள். அசதியால் தூங்கலாம். ஒரு நமட்டுச் சிரிப்பு மனத்துள் எழுந்தது சதாசிவத்துக்கு. தன்னுடன் இருபது ஆண்டுகள் மனைவியாக வாழ்ந்துவிட்டாள் என்று சொல்வதற்கில்லை. அவளிடம் கணவனாக வாழ்ந்ததுதான் உண்மை. நல்லது—கெட்டது என்று பிரித்தறியாமல் வாய்க்கு வந்தபடி அவள் பேசும்போது அதையெல்லாம் கேட்டு நிதானமாக இருந்துவிட்டதை—பலவீனம் கோழைத்தனம் என்று நினைத்துப் பேசியிருக்கிறாளே, அதுதான் உண்மை.

நேற்று அவள் பேசிய பேச்சு மனம் பொறுக்கக்கூடியதாக இல்லை. அப்போது எல்லாவற்றையும் கேட்டுப் பொறுத்துக்கொண்டு நிதானமாக நடந்துகொண்டதால் இருபது வருட உறவு என்றும்போல் இன்றும் தொடர்கிறது.

' நீங்க இந்தக் கல்யாணத்துக்குப் போகவேண்டாம்" என்று அவள் ஆத்திரத்துடன் பேசியது இருக்கட்டும். அத்தனை அலட்சியமாக—வெறுப்பாக முகத்தைத் திருப்பிக்கொண்டு பேசியிருக்கவேண்டாம். தன் மூத்த மகளைப்போல் நேசித்த ஜானகியின் கல்யாணத்துக்குப் போகக்கூடாது என்று தடைபோடுகிறாள், அது எப்படிச் சாத்தியமாக முடியும்?

"எவளோ பெத்த பிள்ளைக்கு நீங்க ஏன் மாப்பிள்ளை தேடணும் ஏன் பணம் கொடுக்கணும்? கல்யாணம் பண்ற வயசிலே நமக்கு ஒரு பெண்ணிருக்கு. அதுக்கு மாப்பிள்ளை தேடுனீங்களா?" என்று நேற்று ஆத்திரத்துடன் கேள்விக்கணைகளைத் தொடுத்தபோது பதில் சொல்ல முடியவில்லை.

லட்சுமியைப் பொறுத்தவரை அந்தக் கேள்விகள் நியாயமாக இருக்கலாம். எவளோ பெற்ற பிள்ளை என்று ஜானகியை ஒதுக்கிவிட சதாசிவத்தால் முடியாது. தன் நண்பர் ராமையாவின் ஒரே மகள்அவள். ராமையா சாதாரண நண்பரல்ல; உயிர்த் தோழன். அந்தக் காலத்தில் சஞ்சியில் மலைநாட்டுக்கு வந்தது முதல் சோதனையும் வேதனையும் பசியும் பட்டினியும் ஒன்றாக அனுபவித்து, கிடைத்ததை ஒன்றாக உண்டு வாழ்ந்த உயிர்த்தோழர்கள். அந்த அனுபவங்களெல்லாம் காலத்தால் அழிக்கக் கூடியனவா? மனிதனாகப் பிறந்துவிட்ட சதாசிவத்தால்தான் அவற்றை மறக்க முடியுமா?

திருமணத்தால் இருவரும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டாலும் நிரந்தரமாகப் பிரியவேண்டிய கட்டம் இரண்டாண்டுகளுக்குள் வரத்தான் செய்தது. லாரி டிரைவராக இருந்த ராமையா விபத்தில் சிக்கிய, இரண்டாம் நாள் எல்லாரையும் விட்டுப் பிரிந்துவிட்டார். கடைசியாக அவர் சொன்ன வார்த்தைகள்;

'சிவம் நீதான் என் மனைவியையும் பிள்ளையையும் காப்பாத்தணும்"

நண்பரின் கடைசி வேண்டுகோளைக் கடமை உணர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார் சதாசிவம். இளமையிலேயே பூவும் பொட்டும் இழந்து கைம்பெண்ணாக, கைக் குழந்தையுடன் நின்ற கண்ணம்மாவைக் கலங்கவிடாமல் தூய பாசத்துடன் துணை நின்றார். அன்று முதல் ஜானகி, தன் அன்பு அரவணைப்பில் மகள்போல் வளர்ந்தாள்.

கணவரின் செயல் லட்சுமியின் மனத்தை வருத்தியது. ஊரார் பேசுவது அவளுக்குத்தெரியும். சதாசிவத்துக்கும் தெரியும். அவர் அதைப் பொருட்படுத்தவில்லை லட்சுமியால் அப்படி இருக்கமுடியுமா? தன் கணவரல்லவா அவர். அவரைக் கட்டுப்படுத்த முயன்றாள். முடியவில்லை. ஏமாற்றமும் கோபமும் வந்தபோது அழவும் நச்சரிக்கவும்தான் முடிந்தது.

தான் வகுத்த பாதையில் சதாசிவம் நடந்தார், வீட்டுக்கு வெளியேயும் உள்ளிலும் நச்சரிப்புத்தான். எதற்கும் பதில் சொல்லவில்லை. எல்லாவற்றையும் சுமைதாங்கிபோல் பொறுத்துக்கொண்டார். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தினார். வேதனை உணர்வுகள் மனத்தில் தேங்கிவிட்டன. வேதனைக்குரிய பிரச்சினை சொல்லித் தீர்க்க இயலாத ஒன்று, எல்லாரும் உணரவேண்டும். தூய்மையான அன்பு என்னவென்று அறிந்துகொண்டால் தானே பாசத்துக்கும் பழிக்குமுள்ள வேற்றுமையை உணர்ந்துகொள்ள முடியும்?

பழிச் சொற்கள் இதயத்தைக் கீறி ரணப்படுத்திவிட்டன. தீராத வலி. அவலக் குரலெழுப்பிய மனசாட்சி ஓலமிடும்போது—சில நேரங்களில் கணவன் — மனைவி—பிள்ளை உறவெல்லாம் முறித்தெறிய சதாசிவம் நினைத்ததுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களில் கொந்தளித்தழும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி நிதானமாக நடந்துகொள்வார். மனவெழுச்சிகளை நிதானப்படுத்தினால் அவை தணிந்துவிடுமா? நீறுபூத்த நெருப்பாகக் கனன்று உள்ளத்தைத் தீர்த்துவிடாதா? உணர்ச்சிகளின் தேக்கநிலை மனச்சுவரை வெடிக்கச் செய்யாதா? — இதைப்பற்றியெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. தன்னைப்பிறர் உணரும்காலம்வரும்வரை நிதானமாக நடக்கவே முடிவுகொண்டார். பிறர் என்றால் மனைவியுங் கூடத்தான்.

நேற்று லட்சுமி அப்படியெல்லாம் பேசியிருக்க வேண்டாம். அதை நினைக்க நினைக்க மனம் மறுகி மறுகி

வெம்புகிறது. ஜானகிக்கு மாப்பிள்ளை தேடியதில் என்ன தவறு? ஜானகியைவிட மகள் சீதாவுக்கு இரண்டு வயது குறைவுதான். ஜானகிக்குப் பின் சீதாவுக்கும் மாப்பிள்ளை தேடலாம் என்பதை லட்சுமி உணரமாட்டேன்கிறாள். ஜானகியின் தாய் கண்ணம்மாவுக்கு பணவுதவி செய்ய வேறு யார் இருக்கிறார்கள்? இவற்றை லட்சுமியிடம் எப்படி விளக்குவது? விளக்கச் செய்தாலும் பயன் இருக்காது, எதற்கும் முரண்பாடாகப் பேசிப் பழகிவிட்டாள். இனி அவளைக் கண்டிக்கவோ திருத்தவோ முடியாது. காலங் கடந்து விட்டது.

* * *

மணி ஐந்தாகி விட்டது ஆறு மணிக்கெல்லாம் கல்யாண வீட்டுக்குப் போகவேண்டும். சதாசிவம் எழுந்தார். உடலெல்லாம் ஒருவிதச் சோர்வு. மனம் கனத்தது. எத்தனை மகிழ்ச்சியாக விடியவேண்டிய நாள்; தெளிவில்லாமல் விடிகிறதே.

சதாசிவம் குளித்துவிட்டு அறைக்குள் நுழைந்தபோது லட்சுமி எழுந்து உடைகளைச் சரி செய்து கொண்டிருந்தாள். கணவர் அதிகாலையிலேயே குளித்துவிட்டு வருவதை அவளுடைய கண்கள் வெறுமையுடன் நோக்கின. சதாசிவம் எந்தச் சலனமுமின்றி உடைகளை அணிந்துகொண்டிருந்தார்.

லட்சுமி காப்பி தயாரித்துக் கொண்டு வரும்போது சதாசிவம் பயணத்துடன் நின்றார். காப்பியை அவரிடம் கொடுத்தாள்.

'காலையிலே தயாராயிட்டீங்களே எங்கே போகப் போறீங்க?' தெரிந்திருந்தும் கேட்கிறாள். சதாசிவம் எதுவும் பேசவில்லை. பேச விரும்பவில்லை என்ன பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல இப்படி ஏதாவது சாப்பிடும் போதுதான் மனமுறிவு உண்டாக்கும் விதத்தில் நடந்துகொள்வாள்.

'லட்சுமி இன்னைக்கு கல்யாண வீட்டிலிருந்து இரவுதான் வருவேன்' என்று கடமைக்குக் கூறிவிட்டு நடந்தார்.

'இங்கே பாருங்க இவ்வளவு சொல்லியும் நீங்க அந்த வீட்டுக்குப் போறீங்களே இப்படி ஒருத்தி சொல்லுறாளேன்னு கொஞ்சமாவது மதிப்புக் கொடுக்கிறீங்களா?'

முற்றம் கடந்து சென்ற சதாசிவம் நின்று திரும்பினார். லட்சுமியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்; பேசவில்லை.

'நான் சொல்றதுதான்போகட்டும்' வெளியே நாலு பேரு பேசுறதுக்கு மதிப்புக் கொடுங்க,'

விரக்தியுடன் லட்சுமியை பார்த்துவிட்டு நடக்க முயன்றபோது பொறுமை இழந்த லட்சுமி சுவருகில் ஓடிவந்தாள். சீதாவும் எழுந்து வாசலருகில் வந்து நின்றாள்.

'நீங்கஇப்படி பிடிவாதமாநடந்துக்கிட்டீங்கன்னு மற்றவங்க சொல்றதை நானும்...... நம்பவேண்டி இருக்கும்,'

சதாசிவம் குலுங்கிவிட்டார். நெஞ்சம் விண்டு வெடிப்பதுபோன்ற வேதனை. பலமிழந்த இதயத்தை இன்னும் கசக்கிப் பிழிகிறாளே. நல்ல காரியத்துக்குப் போகும்போது இப்படியெல்லாம் கேட்கவேண்டியிருக்கிறது. குழி விழுந்த கண்களில் கண்ணீர் ஊறியது. நெஞ்சில் கை வைத்து அழுத்தியவாறு நடந்தார்.

கணவர் பதில் சொல்லாததால் ஆத்திரமும்—ஏமாற்றமும் பன்மடங்காகி லட்சுமியைக் குமுறச்செய்தன.

'இந்தா பாருங்க. நீங்க போனீங்கன்னா இன்னையிலிருந்து எங்களை மறந்திடுங்க. அங்கேயே சுகமா இருங்க' என்று ஆத்திரத்தைக் கொட்டிவிட்டு முகத்தைக் கைகளில் புதைத்து அழுதாள்.

சதாசிவம் தன் மனைவியின் கடைசிச் சொல்லையும் கேட்டுவிட்டார். மனம் அதிரவில்லை. கடைசியாக ஒரு கணவனிடம் தொடுக்க வேண்டிய அம்பைத் தொடுத்துவிட்டாள், நிலை குலைபவில்லை. மனத்தில் பட்ட வெட்டுடன் நடந்தார் சதாசிவம்.

ஒரு கணவனுக்கு — ஒரு மனிதனுக்கு இவ்வளவு பொறுமை இருக்கக்கூடாதுதான். மனத்தில் எழும் கோப—தாப உணர்ச்சிகளைப் பொறுமையால் தணிக்க நினைப்பது தீயை ஊதியணைக்க முயல்வது போலாகும். அணைந்தாலும் அணையலாம்; கொழுந்துவிட்டு எரிந்தாலும்; எரியலாம். அதுபோன்ற ஒரு சோதனையில் அவர் ஈடுபடப் போகிறாரா?

* * *

சதாசிவம் கல்யாண வீட்டில் காலெடுத்து வைத்தபோது கண்ணம்மா விரைந்து வந்து வரவேற்றாள்.

'அண்ணே லட்சுமியும் குழந்தைகளும் வரலீங்களா?'

'இல்லை' என்று விரக்தியுடன் தலை அசைத்தார்.

'லட்சுமிக்கு என்மேல் அப்படி என்ன கோபம்?'

கோபமா? அர்த்தமில்லாத கோபம். பொறாமையாலும் ஏமாற்றத்தாலும் கோபித்துக்கொண்டிருக்கிறாள், இதைக் கண்ணம்மாவிடம் ஏன் சொல்லவேண்டும்? சதாசிவம் எங்கோ வெறித்து நோக்கினார்.

'குழந்தைங்களையாவது அழைத்து வரக்கூடாதுங்களா?'

சதாசிவம் கண்ணம்மாவை வெறுமையுடன் நோக்கினார். உறக்கமின்றி பழுத்துவிட்ட கண்கள் கலங்கின.

கண்ணம்மா மேற்கொண்டு ஒன்றும் பேசவில்லை. அவருடைய கண்கள் கலங்க பொறுக்கமாட்டாதவள் அவள் அந்தத் தாய் தெய்வத்தின் மன உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டவள் கண்ணம்மா ஒருத்திதான். சதாசிவம் கலங்கிவரும் போதெல்லாம் ஆறுதல் மொழி கூறுபவள்


விரைவில்!

புதிய தொடர்கதை!

## எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

# 'கண்ணாத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

அவள், இன்று அவளுக்கும் இனம் புரியாத கலக்கம்.

முகூர்த்தநேரம் நெருங்கியதும், மேள-தாளங்கள் மங்கள ஒலி எழுப்பின ஒருகணம் சதாசிவத்தின் நெஞ்சில் படிந்திருந்த துயரமெல்லாம் மறைந்துவிட்டது போன்ற மென்னுணர்வு மனவிதானத்தில் பனிப்படலம் பரவியதுபோல் ஒருவித குளிர்ச்சி. வாடி-வரண்ட முகத்தில் புத்தொளி பிரகாசித்தது தன் கையிலுள்ள மஞ்சளரிசியைப் பார்த்தார். இருதுளிக் கண்ணீர்—அந்தக் கண்ணீர் இற்று அதில் விழுந்தன.

ஜானகியின் கழுத்தில் மங்கள நாண் ஏறுகிறது. சதாசிவம் மஞ்சளரிசியைத் தூவி ஆசீர்வதித்தார். கண்களில் படர்ந்த கண்ணீர்த் திரையினூடே மறைந்துவிட்ட உயிர்நண்பர் ராமையாவின் உருவத்தைக் காண்கிறார். 'நண்பா உன் மகளுக்கு என்னாலானதைச் செய்துவிட்டேன். உனக்குத் தந்த வாக்குறுதியை ஓரளவு நிறைவேற்றிவிட்டேன்......'

மணமக்கள் பாதங்களில் வணங்கினர் சதாசிவம் பிரமையுடன்நின்றார்.

மாமா, வாழ்த்துங்க மாமா.

ஜானகியின் கனிந்த குரல்கேட்டு உணர்வுபெரு ஜானகியைத் தோள் தொட்டுத் தூக்கினார். பாசப் பரிவுடன் அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். நெஞ்சமெல்லாம் அபரிமிதமான பூரிப்பு, பெருமையுடன் நிமிர்ந்து நின்றார்.

என் மகளே நீ எந்தக் குறையுமில்லாமல் வாழணும் அம்மா.

மணமக்கள் நகர்ந்ததும் சதாசிவம் ஒதுக்குப்புறமாகச் சென்று தேம்பித் தேம்பி அழுதார். துன்பத்துடன் இன்பத்தையும் ஒருமுகமாக ஏற்க வலிவில்லை. மனந்தாளவில்லை. சுட்ட கண்ணாடியில் தண்ணீர்பட்டதுபோல் மனச் சுவரில் வெடிப்பு கண்டது.

* * *

கல்யாண வீட்டிலே கடமைகளை முடித்துக்கொண்டு சதாசிவம் வீட்டுக்குப் புறப்பட்டார். மீண்டும் வேதனை உணர்வுகள் தலைதூக்கின. லட்சுமி கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் முள்ளாகத் தைத்தன.

களங்கமற்ற கண்ணம்மாவை மாசுபடுத்தி ஊரார் சொன்னது இருக்கட்டும்; லட்சுமி சொல்லலாமா? ஊரார் சொல்வதுபோல் உற்றவரும் சொல்ல வேண்டுமா என்ன? அவளைச் சொல்லிக் குற்றமில்லை. அத்தனை உரிமை கொடுத்துப் பேச வைத்ததால் இப்படியெல்லாம் பேசத் துணிந்துவிட்டாள்.

வீட்டைச் சுற்றிலும் இருள் படர்ந்திருந்ததால் தட்டுத்தடுமாறி படியேறி கதவருகில் வந்து நின்றார்.

'லட்சுமி' என்று கதவைத் தட்டினார்.

பதிலில்லை. மீண்டும் இருமுறை தட்டினார்.

'அம்மா, அப்பா வந்துட்டாரு, சீதாவின் குரல் கேட்கிறது.

சில நிமிடங்கள் பொறுத்து நின்றார், கதவு திறக்கப்படவில்லை சீதாவாவது வந்து திறக்கலாம். அவளையும் கட்டுபடுத்திவிட்டாளா அந்த நெஞ்சழுத்தக்காரி? காலையில் சொன்னதுபோல் பிரிந்திருக்கத் துணிந்துவிட்டாளா? தன்னை ஒதுக்கிவிட முடிவு செய்துவிட்டாளா?

சதாசிவத்துக்குப் பொறுக்கமுடியவில்லை. அதுவரை அடிமனத்தில் தேங்கி நின்ற விரக்தியும்—வேதனையும் திரண்டெழுந்தன. எரிமலைபோல் உணர்ச்சிகள் வெடித்துக் கிளம்பின. சீறும் புலிபோல் ஓங்கி அறைந்தார் கதவை. வீடே அதிர்ந்தது. மறுமுறையும் கையை ஓங்கியபோது....முடியவில்லை. இதயத்தின் இயக்கம் நின்றுவிட்டது போன்ற உணர்வு. சோர்வுடன் படியில் அமர்ந்து கதவருகில் சாய்ந்து கொண்டார்.

கதவு அதிர்ந்த வேகம் லட்சுமியின் உள்ளத்தையும் உலுக்கிவிட்டது. இதற்குமுன் அவர் இப்படி கதவைத் தட்டியதில்லை, தான் காலையில் கடுமையாகப் பேசியதன் விளைவை லட்சுமி உணர்ந்தாள். அப்படி ஒரு மனைவி பேசக்கூடாது. வேண்டுமென்றே பழி சொல்லி உறவை முறிக்கும் அளவுக்குப் பேசியிருக்கக் கூடாது.

மனத்தில் பயமும் கவலையும் சூழ எழுந்து சென்று மெல்ல கதவைத் திறந்தாள்.

லட்சுமியின் முன்னால் சரிந்து விழுந்தார் சதாசிவம்.

ஐயோ இதென்னங்க' என்று பதற்றத்துடன் குனிந்து கணவரின் தோள்களைப்பற்றி நிமிர்த்தினாள். பொறுமையிழந்த அந்தத் தூய மனிதனின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை; உடலிலும்தான்,

இத்தனை நாளும் மனத்தில் எழும் கோப-தாப உணர்ச்சியை எவ்வளவு சகிப்புத்தன்மையுடன் ஒருமுகப்படுத்தி நிலைகுலையாமல் நின்று நிதானித்தார். அந்த உணர்ச்சிகளெல்லாம் இன்று கொந்தளித்தெழுந்தபோது அவற்றைப் பக்குவமாக நிதானிக்க அவரால்—அவரது மனத்தால் முடியவில்லையே! எத்தனையோ உணர்ச்சிகளைத் தேக்கி வந்த மனச்சுவர், இப்போது வெடிப்பு கண்டுவிட்டிருக்கிறதே. அந்த வெடிப்பைத் தாளும் மன உரத்தை அவரால் தொடர்ந்து பெற முடியாததால்தானே இன்று இந்நிலை ஏற்படக் காரணமாயிற்று? எதற்கும்—பொறுமைக்கும்— நிதானத்துக்கும் ஒரு எல்லை வேண்டாமா? தூய உள்ளமும் தியாகவுள்ளமும் இருந்தால் போதுமா என்ன? அதற்கேற்ப மனவலிவு வேண்டாமா? பாவம் சதாசிவம் அந்த மனவலுவைப் பெருமல் போனதனால்தானே நிதானம் தவறிப்போனார்.


**வாய்வு சூரணம்**
மலச்சிக்கல் மலக்கட்டு, பித்த உஷ்ண வாய்வு, கை கால், இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு, செரியாமை, வயிற்று வலிக்குச் சிறந்தது.
160 கிராம் டின் ரூ. 4—00

**பூபதி எண்ணெ**
இருமல், இளைப்பு, ஏங்கல், குத்தல், வரட்டு, புகைச்சல், இருமல், மழைப் பனிக் காலங்களில் வரும் இரைப்பு, மேல் மூச்சு, குணம செய்யவல்லது,
புட்டி ரூ. 7—50

**கக்குவான் மருந்து**
முதல் நாளிலேயே கக்குவான் கிருமிகளை வெளிப்படுத்தி நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் குணம் செய்யவலலது.
புட்டி ரூ. 2—00

**வீரகேசரி மாத்திரை**
ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்.
100 பில்ஸ் ரூ. 25 50—ரூ. 13, 24—ரூ. 7.

**S. V R. சன்ஸ் R. I M P வாய்வுசூரணம் டிப்போ**
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9

உபஏஜெண்டுகள்
அமிர்தலால் அண் கோ., 146 நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3
ராஜா மெடிகல ஹால், 31, தர்மராஜா கோயில் தெரு, பெங்களூர்- (கண்ட்)
ஈ, வல்லராம நாடார் அண் சன்ஸ், 188-எ தாராவி ரோடு. பம்பாய்-17,
சொக்கனாதம் செட்டியார், மருந்துக் கடை திருபபாபுலியூர், கடலூர் என், டி.
ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன்.

செம்பரிதி வானின்று சிரித்து விட்டு
சிலபேரின் நெஞ்சத்தை சிதைத்துப் போனான்!
தம்புகழில், தன்நிலையை தாயின் நாட்டை
தகுதியினை மறந்தோரை இதழ்தல் போலே
அம்புவியை அணைக்கின்ற கங்குல் பெண்ணாள்
அலைமோதும் உளங்களினை நீவி விட்டாள்!
வம்பர்சிலர் இளம்பெண்கள் வாழ்வைப் பற்றி
வாய்பட்ட வாறெல்லாம் பேசிச் சென்றார்!

நல்லவர்போல் நடிக்கின்ற நன்றி கொல்லும்
நரிக்கூட்டம் ஓர்புறத்தே பாய்வி ரித்து
சொல்லுக்குச் சொல் எதுகை மோனை சேர்த்து
சோகாக்கும் வஞ்சத்தை நெஞ்சத் தேந்தி
நல்லாரைப் பொல்லாரென் றேசிப் பேசி
நாவிற்குத் தீனியிட்டு நகர்ந்தொ துங்கும்!
இல்லாமை "இல்லாமை" வேண்டு மென்றே
இயம்புகிற அரசியலை சிலது பேசும்!

"கேட்பதெலால் கேட்டபடி தருதல் என்றால்
கேட்டதிலும் சிறப்பில்லை! தந்த வர்க்கும்
கேட்பவரைச் சிறப்பிக்கும் தன்மை இல்லை!
கிளைவிட்டுக் கிளைதாவி, அத்தான் உம்மை
கேட்கின்றேன் வினாவென்று! வள்ள லென்பான்
கேட்டதன்பின் தருவோனா அல்லால் ஒன்றை
கேட்குமுனம் தருவோனா? சொன்னால் இன்பம்
கேட்டபடி தருகின்றேன்" என்றாள் வள்ளி!

"கண்டவுடன் கொண்டனையோ காதல்? கண்கள்
கண்டவுடன் விண்டதுவோ நெஞ்சம்? பண்ணாள்
கண்டவுடன் கடிதங்கள் கொண்டோம்; பின்னர்
கண்டன்றோ காதலராய் மனமி ணைந்தோம்?
கண்டவுடன் காதலெனில் காதல் தன்னைக்
கடைச்சரக்காய் கருதுகிற கயமை நாட்டில்
அண்டபெரு கோளமாய் ஆகி இங்கே
அமர்ந்தாட்சி புரியுதடி அனைவருள்ளும்!

# எதிர்கால ஏழை!

—திருவாரூர் முத்துராமன்—

அவ்வேளை மாந்தோப்பில், வேலன் என்பான்
அறிவியலும் அரசியலும் பொருளா தார
செவ்வியலும் சிறந்தோங்கக் கற்ற பின்னர்
சிருங்கார இயல்கற்கும் சிந்தை யோடு
கவ்வும்கண் இயல்கொண்ட காதல் பெண்ணாள்
காலடியின் ஓசைக்குக் காத்திருந் தான்!
அவ்வேளை வள்ளியெனும் பேரைக் கொண்ட
ஆரணங்கு வேலவனைத் தேடி வந்தாள்!

ஆரணங்கு வேலவனைத் தேடி வந்தாள்!
அவனெழுந்து வள்ளியின்முன் கையைப் பற்றி,
"யாருமிலை; நாமிருவர்! மாலை வேளை!
யாரும் நமைப் பாரார்நாம் இன்பவானில்
இறகின்றி இயன்றவரை எழுந்து பாய்வோம்!"
என்றனன்காண்! என்றவுடன் எழில்பூங் கோதை,
"பாரத்தான் தூரத்தே" என்றாள்; ஆங்கே
பாவையினை, வேலவனைப் பார்க்கும் கூட்டம்!

"இவ்வுலகம் இப்படித்தான் இருக்கும் அன்பே!
என்னைப்பார்! கண்ணுள்நீ இருக்கின் றாயாம்!
சில்லென்ற குளிர்த்தென்றல் சிந்தை தன்னை
சிலிர்த்தற்கு மோதுதடி! மக்கள் மந்தை
கவ்வுகிற காட்சிவிடு; காதல், நெஞ்சில்
கனன்றுபெரு தீக்கோலம் ஆகு தன்பே!
செவ்விதழைச் சேர்த்திடுவோம்! செங்க ரும்பின்
சிறப்பாவோம்! சேர்ந்திடுவோம்"என்றான் வேலன்

ஈவதெனில் இயல்பறிந்து ஈதல் வேண்டும்
ஈவதற்கும் இதயத்தின் நட்பு வேண்டும்!
ஈவதனை வாணிபமாய் பேரம் செய்யும்
இழிகுணத்தை இந்நாடு ஏற்ற தில்லை;
சாவுநமைத் தழுவிடுமுன் சாந்தி தேடி
சலசலப்புச் செய்வதெல்லாம் ஈகையாமோ!
ஈவதெனில் இடதுகை அறியா வண்ணம்
ஈகின்ற இயல்படியே! இன்னும் கேளாய்!

இன்னார்க்கு இவ்வேளை இவைகள் வேண்டும்
இவைஇவைகள் இவ்வகையில் ஈதல் வேண்டும்
என்பதனைத் தேர்ந்தவனும்; கேட்ப தெல்லாம்
எடுத்தேகத் தருவோனும்; கேட்பான் போலத்
தோன்றிடினும், கேட்டுபல ஈவோன் தானும்
தேறியபின் காதலராய் இணைதல் போலே
சான்றோரால் வள்ளலென சாற்றக் கேட்டேன்!
சழக்கினியேன் சாய்ந்துவிடு மார்பில் என்றான்!

இருக்கின்ற வரைஈதல் என்றால், அத்தான்
எதிர்கால ஏழையெனச் சொல்கின் றீரா?
சிரிக்கின்றேன்! சிரிக்கின்றேன்! உம்மைக் கண்டே!
சிலகேட்டுப் பலபறிப்பார் இருக்கின் றாரே!"
மருக்கொழுந்து வள்ளிஅவன் மார்பில் சாய்ந்தாள்!
மாறிமாறி கனிஇதழில் முத்த மிட்டான்
இருள்விட்டு கீழ்வானில் பரிதி வந்தான்
இனித்தஇதழ் வெளுத்தபின் எழுந்து சென்றார்!

# இந்தியாவின் நினைவில் அட்லி!

[அடிமை இந்தியா — சுதந்திர இந்தியாவாக ஆகிவிட வேண்டும் என்பதில் திரு. அட்லி பெரு முயற்சி மேற்கொண்டிருந்தார். வருந்தத்தக்க அவரது மறைவுக்கு, ஈடுகட்டி விட முடியாது. நினைத்துப் பார்ப்பதைத் தவிர.]

அட்லி பிரபுவுக்கு இந்திய மக்களிடம்பற்றும் பாசமும் உண்டு. சுமார் இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாராளுமன்றத்தில் தொழிற்கட்சி உறுப்பினர்களுள் ஒருவராகப்பின்னணியில் இருந்தகாலத்திலேயே அவர் இந்திய மக்களுடைய நலனில் அக்கறை காட்டினுர். தொழிற்கட்சி பதவிக்கு வந்ததும் தம்முடைய கருத்தை செயலாக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது; தொழிற்கட்சிப் பிரதம மந்திரியாகப் பதவியேற்றதும் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது.

இந்தியாவின் எதிர்காலம்பற்றிச் சிந்திப்பதற்காக நிறுவப்பட்ட சைமன் கமிஷனில் இடம் பெற்ற இரண்டு தொழிற்கட்சி உறுப்பினர்களில் ஒருவர் திரு, அட்லி. சைமன் குழுவினர் 1927இல் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தார்கள். இந்தப் பயணத்தில் கலந்து கொண்டதால்—சைமன் குழு உறுப்பினர் என்ற முறையில் — இந்தியர்களுடைய வாழ்க்கை இந்தியத் தலைவர்களுடைய கருத்துக்கள், இந்தியாவின் நிலைமை முதலிய பல தகவல்களை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு திரு. அட்லிக்குக் கிடைத்தது. பிற்காலத்தில் இந்தியாவின் சுதந்திரம்—பற்றிச் சிந்திப்பதற்கு இவை உதவின என்று கூறலாம்.

அட்லி பிரபு 1928—31 ஆண்டுகளில் பதவி வகித்த தொழிற்கட்சியில் பணியாற்றினுர். பிறகு இரண்டாம் உலகப் போர் தொடங்கும் வரையில் எதிர்க் கட்சியில் அமர்ந்து பணியாற்றினுர். ஆளும் கட்சியிலிருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவர் இந்தியாவின் நண்பஞகவே விளங்கினுர். இந்திய அரசியல் சட்டப் பரிசீலனைக்காக இரு அவைகளும் சேர்ந்து நியமித்த செலக்ட் கமிட்டியிலும் திரு. அட்லி பணியாற்றினுர். இந்திய அரசியல் சட்டத்தை (1935) உருவாக்குவதற்காக நடந்த விவாதங்களில் அவர் சிறப்பாகப் பங்கெடுத்துக்கொண்டார்,

இரண்டாம் போர்க்காலத்தில் ஏற்பட்ட கூட்டு மந்திரிசபையில் துணைப் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்ட பிறகுதான் இந்திய விவகாரத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பு திரு, அட்லிக்குக் கிடைத்தது. இந்திய விவகாரம் பற்றிச் சிந்திக்கும் அமைச்சரவைக் குழுவில் தலைவராக அவர் பணியாற்றினுர் இந்தக் குழுவின் ஆலோசனையின் பேரில் தான், பிரதமர் திரு. சர்ச்சில் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில், அரசியல் நிர்ணய சபை நிறுவுவது பற்றி இந்தியத் தலைவர்களுடைய கருத்தைத் தெரிந்து வருமாறு ஸர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸை இந்தியாவுக்கு அனுப்பினுர். கிரிப்ஸ் தூது தோல்வியுற்றது என்ருலும் அது எதிர்காலப்பணிக்கு பின்னணியாக அமைந்தது.

பிரிட்டனில் 1945இல் நடந்த பொதுத் தேர்தலில் தொழிற்கட்சிக்கு வெற்றி கிடைத்தது. திரு. அட்லி பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்ருர். பதவி ஏற்றதும் அவர் செய்த முதற்காரியம் இந்தியாவின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்காக ஓர் அமைச்சரவைக் குழுவை நியமித்து இந்தியாவுக்கு அனுப்பியது தான். அந்தத் தூதுக் குழுவும் வெற்றிபெறவில்லை. ஆனுல் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை மாற்ற வேண்டும் என்று மனபூர்வமாக தொழிற்கட்சி விரும்புவது தெளிவாயிற்று, அமைச்சரவைக் குழுவின் தூது முயற்சி தோல்வியுற்றதால் திரு. அட்லி சோர்வுறவில்லை. இந்திய உபகண்டம் ஒரு முழு நாடாக சுதந்திரம் அடைவது சாத்தியமில்லை என்ருல் சமயத் தலைவர்களுக்கு மன நிறைவு ஏற்படும் முறையில் துண்டாக்கி இந்தியாவுக்கு விடுதலை வழங்கலாம் என்று பிரிட்டன் கருதிற்று. இந்தப் பணியைச் செய்து ஆட்சி மாற்றத்தின் கடைசிப் பகுதியை நிறைவேற்றும் தனி ஆற்றல் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத்தான் உண்டென்று திரு. அட்லி தீர்மானித்தார்.

மவுண்ட்பேட்டன் பிரபுவை வைசிராயாக நியமித்ததுடன், ஆட்சி மாற்றத்துக்கான ஏற்பாடு ஒருசில மாதங்களில் செய்துவிட வேண்டும் என்று தெளிவாகக் கூறி அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். (தொழிற்கட்சி பதவிக்கு வந்ததிலிருந்தே) திரு அட்லி இந்திய விவகாரம்பற்றி நேருஜியுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பணியாற்றினுர். நேருஜியின் ராஜதந்திர சாகசத்தால், 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தியாவுக்கு விடுதலை வழங்குவது சாத்தியமாயிற்று. நேருஜி பிரிட்டனும் நேசமாக வாழ விரும்பினுர்; சுதந்திர இந்தியா காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் என்று நேருஜி உறுதியாகக் கூறியதால் காமன்வெல்த் வரலாற்றில் ஓர் புதிய சகாப்தம் தோன்றிற்று.

மனித சமுதாயத்தின் நலத்திற்காக மாபெரும் தலைவர்களான நேருஜியும் அட்லியும் சேர்ந்து பணியாற்றியதற்கு ஈடாக வேறு உதாரணம் காட்டுவது எளிதல்ல. சுதந்திர ஜனநாயக இந்தியாவை உருவாக்கிய அவர்களை மனிதகுலம் மறக்கவே மறக்காது.

## இந்தியைத் திணிக்க முடியாது!

''நமது மக்களில் நான்கில் ஒரு பங்கினர் இந்தியை விரும்பவில்லை; இதுதான் பிரச்சினை!

''ஜனநாயக ஆட்சி நடத்தும் நாடு இஷ்டப்படாத தென்னுட்டு மக்கள் மீதும், வங்காள மக்கள் மீதும், இந்தியைத் திணிக்க முடியாது.

''இந்திக்கு அவர்கள் தயாராகும் வரையிலோ, அல்லது ஆங்கிலம், ஏதேனும் ஒரு இணைப்பு மொழியைத் தீர்மானிக்கும் வரையிலோ அவர்கள் ஆங்கிலத்தை உபயோகிக்க விட்டுவிட வேண்டும்.

—மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் சந்திரசேகர்.
அவுரங்கா பாத்தில கூறியது.




## 3—24
## ஓடாதே தூமகேது!

"அழகு முல்லையின் மணத்தை நுகர்ந்துவிட வேண்டுமென்று, ஆசை வெறியோடும் அங்கத் துடிப்போடும் ஓடி வந்தாயே—இதோ அழகு முல்லை அஞ்சலை; இரத்தம் பீறிடும் உடலோடு அஞ்சலை! திக்கற்றவள்! உன் முரட்டுப் பிடியிலிருந்து திமிறி ஓட முடியாதவள்! தயங்கி நிற்பது ஏன்? தாமதிப்பது ஏன்! கத்தி மார்பில் பாய்ந்திருக்க, கண்ணீர் கன்னங்களில் வழிந்தோட, கட்டிலில் உட்கார்ந்திருக்கிறாளே—பார்! அஞ்சலைதானே உனக்குவேண்டும்? இதோ இருக்கிறாள், இரத்தம் வழிந்தோடும் உடலோடு! மலர் மேனியாள் கட்டிலில் இருக்க, மரம்போல நிற்கிறாயே? பாய்ந்து செல்! அவளது பருவ உடலைப் பற்றியிழு! பருகு, பருகு, பரவசத்தை உன்னால் முடிந்தவரை பருகு!" என்று யாரோ தன் விலாவில் குத்திக் கட்டளையிடுவதைப் போலத் தூமகேதுவிற்குத் தோன்றியது.

அவன் உடம்பெல்லாம் குபீரென்று வியர்த்தது. நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. தலை சுற்றியது. தரையே காலடியிலிருந்து நழுவி ஓடுவதைப் போலத் தோன்றியது,

பக்கத்திலிருந்த தூணைப் பிடித்துக்கொண்டு நின்றான்.

"காயைத் தடிகொண்டு அடித்துக் கனியவைக்கப் பார்த்த, கயவனே! அபலைப் பெண்ணின் இளமையைச் சுவைக்க நப்பாசை கொண்ட நயவஞ்சகனே! சூதுவலை வீசி சுந்தரியைப் பிடித்துச் சுகம் அனுபவிக்கத் துடித்த துன்மார்க்கனே! போடுவதோ பெரியமனிதன் வேடம்—தேடுவதோ கதியற்ற கன்னியரை! ......காமுகனே! கசடரின் தலைவனே! கைகூடிற்றா உன் வஞ்சினம்? வஞ்சி வேந்தன் மைந்தனின் வாழ்க்கைத் துணைவியாகவா போகிறாள்—பார்க்கிறேன் அதையும்—அந்தப் பஞ்ச வண்ணக் கிளியாளை என் பக்கத்தில் இருத்தி, மடியில் சாய்த்துக் கொஞ்சச் செய்கிறேன்—என்று தோள் தட்டினாயே! தோகை மயிலாளை என் எதிரே ஆனந்த நடனம் புரியச் செய்கிறேன் பார் என்று ஆணவக் குரல் எழுப்பினாயே! வந்தாயே ஓடோடியும். வயோதிகத்திலும் வாலிபச் சுவையை அனுபவிக்க! முல்லை மலரைத் தொடவாவது முடிந்ததா உன்னால்! மூர்க்கனே! இப்பொழுது உன்நிலைஎன்ன? உன் அடங்கா ஆசையின் — தணியாத் தாகத்தின் — கதி என்ன? ஏமாந்தாயா? ஏமாந்தாயா? ஏமாந்தே போனாயா?" என்று நாலா திசைகளிலுமிருந்து, பயங்கரமான ஏளனச் சிரிப்பு எழுந்து அவனது காதுகளைச் செவிடுபடச் செய்தது!

"கொலை! கொலை! தற்கொலை!" என்று அவன் இதயத்தில் ஒரு குரல் ஓலமிட்டது! பயம் ஒவ்வொரு மயிர்க்காலிலும் பாய்ந்தோடியது!



'ஒற்றர் நாயகமே!'

சிரித்துக்கொண்டேதான் அஞ்சலை இப்படி அழைத்தாள்.

ஆனால். அவளது குரல், கருநாகமாக அவனது இதயத்தை வெடுக்கென்று கடித்தது.

மெதுவாகப் பார்வையை அவள் பக்கம் திருப்பினான்.

'ஒற்றர் நாயகமே! ஓங்கார சொரூபனே! ஒழுக்கம் தவறியவளாக, கற்பு இழந்தவளாக கண்ணகி வம்சத்தில் வந்த அஞ்சலை ஒருநாளும் மாறமாட்டாள்-சிறைப்படுத்துவதின் மூலமாகவோ, சித்திரவதை செய்வதின் மூலமாகவோ, மாபாதகர்கள் அவளை மாற்ற முடியாது. மாசுபடுத்த முடியாது — என்பதைத் தெரிந்துகொண்டாயா?' என்று அஞ்சலையின் வாய் இடியோசையை வெளியிட்டது.

குத்துவாளினால் குத்திக்கொண்டதும், அந்த வலியைத் தாங்க முடியாமல் கட்டிலில் தள்ளாடி உட்கார்ந்தவள் — சிறிது நேரங்கழித்து மெல்ல எழுந்து நின்றாள்.

நிற்க முடியாமல் தடுமாறினாள். அந்தத் தடுமாற்றத்தோடு தூமகேதுவின் முகத்தைப் பார்த்ததும், அவளது கோபாவேச வெறி அதிகமாயிற்று. அந்த வெறியுணர்ச்சி, தள்ளாடிய அவள் உடலுக்குப் புதுப்பலத்தையும், புது தைரியத்தையும் தந்தது.

யாரைக் கண்டு நடுங்கினாளோ—யாரிடமிருந்து தன் கற்பையும் கண்ணியத்தையும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று சாவுக்கேணியில் துணிந்து குதித்தாளோ — அவன் இப்பொழுது சிறு துரும்பினும் சிற்றெறும்பினும் சாமானியனாக, அவள் கண்களுக்குத் தோன்றினான்.


'தூமகேதுவே! துன்பத்தின் பிறப்பிடமே! காசு கொட்டியதும் — அதைக் கண்டு அகங் குளிர்ந்து—சதிராடும் ஈனக் குடியில் பிறந்தவள் அல்லடா அஞ்சலை! பாராளும் அரசனை உன் காலடியில் விழச் செய்கிறேன் — பட்டத்தரசியாக்கிவிடுகிறேன்—பகட்டோடும் படாடோபத்தோடும் வாழலாம் என்ற ஆசை வார்த்தைகளைக் கேட்டு, இதயம் கூத்தாட எந்த இழிசெயலுக்கும் துணிந்து நிற்கும்—கங்கை தீரத்துக் காரிகை அல்லடா அஞ்சலை! நாட்டின் மறுமலர்ச்சிக்கு—நாட்டு மக்களின் கருத்துப் புரட்சிக்கு—தன்னைப் பலிபீடத்தில் சாய்த்துக்கொண்ட

தன்மான வீரன் பொன்னையாவின் தங்கையடா நான் — பொன்னையாவின் தங்கை! வாழ்வைவிட மானம் பெரிது என்றெண்ணும் வீரர் குடியில் பிறந்தவள் நான்! மூர்க்கனே என்னைக் கசக்கிய மலராக்கக் காலமெல்லாம் முயன்று வருகிறாய்! முடிந்ததா உன்னால்? கள்ளத்தனமாகத் தூக்கிவந்து கட்டுக் காவலில் என்னை வைத்து, என் கற்பைச் சூறையாட வட்டமிட்ட வல்லூறே! கிழக்குரங்கே! என் அருகே நெருங்க முடிந்ததா உன்னால்? என் மார்பில் பாய்ந்திருக்கும் இந்த வாளை உன் மார்பில் பாய்ச்ச முடிந்திருக்கும் என்றால்! பாதகனான உன் இரத்தத்தை, இந்தப் பாண்டிய நாட்டு மண்ணில் ஓடும்படிச் செய்திருக்க முடியும் என்றால்! அப்படி நான் செய்துவிட்டால், உத்தமர் சோலையப்பனின் சபதம் என்னாவது? அந்த வஞ்சினத்தை முடிக்கத்தானே, பாண்டிய நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தத்தானே, வாழ்ந்து வருகிறார் அவர்!' என்று கலங்காத திடமான குரலில் பேசியவளை இடைமறித்து, 'சோலையப்பன் உயிரோடு இருக்கிறானா?' என்று தூமகேது குத்தலாகக் கேட்டான்.

'ஆமாம்! உயிரோடு இருக்கிறார் உன் உயிரைக் குடிப்பதற்காக! என் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல நாட்டில் வாழும் நல்லவர்கள் மனத்தில் ஓர் ஆவேசத்தை எழுப்ப வேண்டும் என்பதற்காகவுமே நான் தற்கொலைக்குத் துணிந்தேன்! மக்கள் வீறுகொண்டெழப் போகிறார்கள்! வேடதாரியே! வேங்கை உள்ளம் கொண்டவனே! உன் மமதை மண்ணாகப் போகிறது! உன் கொடுமைகள் களையப்படப் போகின்றன! அக்கிரமங்கள் அழிக்கப்படப் போகின்றன! ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்படப் போகின்றன! ஆணவமும் அகங்காரமும் நிலவிய சிகரத்தினின்றும், அவமானமும் அழிவும் நிறைந்த படுகுழியில் நீ தூக்கியெறியப்படப் போகிறாய்! பாண்டிய நாட்டிற்கு வெளியே இல்லை, இல்லை—பயங்கரமான மரணச் சேற்றில் தூக்கியெறியப்படப் போகிறாய்!'

மனத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்த அக்கினி குண்டத்திலிருந்து, மட மடவென்று நெருப்புத் துண்டுகளை வெளியே எடுத்து வீசினாள்.

காய்ந்திருந்த தொண்டையை நனைக்க தூமகேது உமிழ்நீரைக் கூட்டினான். கட்டாந் தரையைப்



போல நாவே வறண்டுவிட்டிருக்கும் போது, உமிழ்நீர் எங்கிருந்து சுரக்கும்.

அஞ்சலையின் மூளை குழம்பிவிட்டிருக்கிறது! ஆமாம், இவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது! இல்லாவிட்டால், எப்பொழுதோ செத்து புதைத்த இடத்தில்கூட புல் முளைத்துப் போன சோலையப்பன் இன்னமும் உயிரோடு இருக்கிறான் என்று கூறுவாளா? ஏதோ வஞ்சினமாம்—அதற்காகவே வாழ்கிறானாம்! என்ன பிதற்றல்! பைத்தியத்தின் உளறல் என்று ஓடத் தொடங்கிய அவனது சிந்தனை, வெளியே பெரிய சப்தம் கேட்டதும் தடைப்பட்டு நின்றது.

நிலா முற்றத்திற்கு வந்து கீழே தோட்டத்தில் குனிந்து பார்த்தான்.

அந்த ஆரண்ய மாளிகையைச் சுற்றிலும் காவலிருந்த அவனது போர்வீரர்களுக்கும், சேர நாட்டுப் போர்வீரர்களுக்கும் இடையே வாட்போர் நடந்துகொண்டிருந்தது.

'வந்தது ஆபத்து!' என்று அவனது வாய் அச்சத்தோடு முணுமுணுத்தது.

'ஆ! இதென்ன விபரீதம்? கனகசேனனுக்குப் பக்கத்திலிருப்பவன் சோலையப்பனைப் போலத் தெரிகிறதே! சொன்னாளே அஞ்சலை, சோலையப்பன் உயிரோடு இருப்பதாக, என் உயிரை வாங்கப் போவதாக! பைத்தியத்தில் உளறுகிறாள் என்று நினைத்தேனே — பார்க்கப் போனால் அவன் உயிரோடு இருக்கிறானே! தெரிபவன் உண்மையான சோலையப்பனா அல்லது அவனது ஆவியா? ஆவியாவது மண்ணாங்கட்டியாவது ஒன்றும் கிடையாது? அவனைத் தூக்கிலிட்டதில் ஏதோ சூழ்ச்சி நடந்துவிட்டிருக்கிறது?'

இவ்வாறு எண்ணிப் பெருத்த அதிர்ச்சியடைந்தான். அந்த அதிர்ச்சி தன் சதையையும் எலும்புகளையும் அரித்துத் தின்பதாக அவனுக்குத் தோன்றியது.

''ஆணவமும் அகங்காரமும் நிலவிய சிகரத்தின்றும் அவமானமும் அழிவும் நிறைந்த படுகுழியில் நீ தூக்கியெறியப்படப் போகிறாய்! பாண்டிய நாட்டிற்கு வெளியே—இல்லை, இல்லை — பயங்கரமான மரணச் சேற்றில் தூக்கியெறியப்படப்போகிறாய்!'' என்று சிறிது நேரத்திற்கு முன்பு அஞ்சலை ஆவேசத்தோடு சொன்னவார்த்தைகள் திரும்பவும் அவன் காதுகளில் வந்து ஒலித்து அவனது அந்தரங்க இதயத்தை நடு நடுஙகச் செய்தது.

'இந்த இடத்தைவிட்டு எப்படியாவது தப்பியோட வேண்டும்!'' என்று மாடியைவிட்டுக் கீழே வேகமாக இறங்கினான்.

அப்படி அவன் இறங்கி ஓடிய சிறிதுநேரங்கழித்து, எதிரியின் ஆட்களைப் பயந்தோடச் செய்துவிட்டு கனகசேனனும் சோலையப்பனும் மாளிகையினுள் நுழைந்தனர்.

'அஞ்சலை! அஞ்சலை!' என்று வெறிபிடித்தவனைப் போலக் கனகசேனன் கத்தினான்.

மாடியை அடைந்த இருவரும், அஞ்சலை இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டதும், ஆட்டமோ அசைவோ இல்லாத சிலைகளாக நின்று விட்டனர்.

சில நொடிகள் அந்த அறையில் மரண அமைதி நிலவியது.

அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு 'அஞ்சலை' என்ற கனக சேனனின் கதறல் எழுந்தது, சோலையப்பன் ஓடித் தரையில் கிடந்த அஞ்சலையைத் தூக்கி கட்டி லில் படுக்க வைத்தான்.

'அத்தான்! அத்தான்!' என்று அவள் ஈனக் குரலில் அழைத்தபடி கண்ணீர் விட்டாள்.

கனகசேனு! அஞ்சலைக்கு ஆபத் தொன்றும் இல்லை. நீ பதருதே, பயப்படாதே! உடனே நீ இவளை மதுரைக்கு எடுத்துக்கொண்டு வந்துவிடு......அந்தக் காதகன் எப் படியோ தப்பியோடிவிட்டான்! அவனை நான் துரத்திச் சென்று, பொன்னையாவின் கல்லறைக்கு இரத்தாபிஷேகம் செய்தாக வேண் டும்!' என்று பட படவென்று சோலை யப்பன் கூறிவிட்டு, யாருடைய பதிலையும் எதிர்பார்க்காமல், அவ் விடத்தைவிட்டு உருவிய வாளோடு பறந்து சென்றான்.

ஆரண்ய மாளிகையை விட்டு இடையிலிருந்த நான்கு கல் தூரத் தையும் காற்றுக்கடந்து மதுரைக்கு வந்த தூமகேது, நேரே அரண் மனைத் தோட்டத்தினுள் நுழைந் தான்.

அங்கே தன் ஒற்றர் குழுவைச் சேர்ந்த ஒருவன், யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, கை தட்டி அவனைத் தூமகேது அழைத் தான்.

'உங்களை எங்கெங்கு தேடுவது ஒற்றர் நாயகமே? விபரீதம் நடந்து விட்டது! நமது சோழ மன்னரிடத் தில் அன்புடைவர்களாக இருக்கும் இராச ராசக் கற்குடி மாராயன், இராச கம்பீர அஞ்சு கோட்டை நாடாழ்வான் முதலிய படைத் தலை வர்களைப் பாண்டிய மன்னர் இன்று காலை நாடு கடத்திவிட்டார்!' என்று அந்த ஒற்றன் திகில் நிறைந்த குரலில் சொல்லியதும், தூமகேது வின் குலைநடுக்கம் இன்னும் அதிக மாகிவிட்டது.

'சோழ மன்னருக்கு ஓலை அனுப்பி விட்டீர்களா?' என்று அந்த ஒற்றன்



## முக்கிய அறிவிப்பு

"காஞ்சி" அலுவலகத்தோடு, அஞ்சல் தொடர்புகொள்வோர், சின்ன காஞ்சிபுரம் என்பதற்குப் பதிலாக,

**காஞ்சிபுரம்—3**

என்ற விலாசமிட்டு எழுத வேண் டுமாய் அன்புடன் வேண்டு கிறோம்.

உரிமையாளர்
'காஞ்சி'
காஞ்சிபுரம்—3.

சுற்றும் முற்றும் பார்த்தபடி மெது வாகக் கேட்டான்.

'ஓலை வேண்டாம் நானே நேரில் செல்கிறேன்! இப்பொழுதே செல் கிறேன்! வைகை நதி தீரத்திலுள்ள சிவன் கோயிலில் நான்போய் இருக் கிறேன்! நமது போர் வீரர்களில் இருபது பேரை அழைத்துக் கொண்டு, உடனே நீ அங்கு வந்து சேர்!' என்று ஒற்றனுக்குத் தூம கேது கட்டளையிட்டுவிட்டு, அரண் மனைத் தோட்டத்தைவிட்டு வெளியே வந்தான்.

'பாண்டியன் பகிரங்கமாக எதிர்க் கத் தொடங்கிவிட்டான்! இனி நமக்கு இங்கு ஒவ்வொரு நொடியும் ஆபத்துதான்! எப்படியாவது மதுரையைவிட்டுத் தப்பி, சோழ நாட்டிற்குச் சென்றுவிட வேண்டும்

அவனது மனக்கடலில் குமுறல் கள் எழுந்தன.

'வஞ்சகா, அகப்பட்டுக் கொண் டாயா?, என்ற இடியோசையைக் கேட்டதும், தூமகேது 'அய்யோ!' என்ற உள்ள நடுக்கத்தோடு திரும் பிப் பார்த்தான்.

உருவிய வாளோடு தன்னை நோக்கி சோலையப்பன் ஓடி வரு வதைக் கண்டதும் தூமகேது தன் பருத்த உடலைத் தூக்கிக்கொண்டு ஓடத் தொடங்கினான்.

'ஓடாதே தூமகேது! ஓடினாலும் இனி நீ தப்பமுடியாது!' என்று ஆவேசத்தோடு கூறிக் கொண்டே அவனைச் சோலையப்பன் துரத்திச் சென்றான்.

[அடுத்த இதழில் முடியும்]

4 ம் பக்கத் தொடர்ச்சி

தன் தம்பி ஒழுக்கங்கெட்டு அலை பவன்—என்பது என் தாய்க்கு நன்ருகத் தெரியும். அவன் பெண்களிடம் முறைதவறி நடந்துகொள்ளமுயன்றதின் காரணமாக எத்தனையோ ஊர்களில் அடிபட்டு உதைபட்டு வந்திருக்கிருன். ஓர் ஊரில் கணவனை இழந்த கைம்பெண் ஒருத்தியிடம் தகாத வழியில் நடக்க முயன்று கைதாகிவழக்கில் சிக்கியிருக்கிருன். இவையெல்லாம் அறியாதவள் அல்லள் என்தாய். ஆனுல் தானே ஒழுக்கங் கெட்டவளாக இருக்கையில் தன் தம்பியின் ஒழுக்கக் கேட்டை அவள் எப்படிக் கண்டிப்பாள்? கண்டிக்கக்கூட வேண்டாம், "நம் வீட்டில் இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றனவே, முன்பின் தெரியாத பெண்களிடமே தவருக நடக்கத் துணிபவன், நம் பெண்களிடம்—அவனுக்கு முறைப் பெண்களான நம் குழந்தைகளிடம் எப்படி ஒழுங்காக நடந்துகொள்வான்?" என்று எண்ணிப் பார்த்து அவனை எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வராமல் இருக்கச் செய்திருக்கலாம். அதைத்தான் செய்யவில்லையென்ருல் அவனேடு நான் அதிகமாகப் பேசுவதையாவது தடுத்திருக்கலாம். அவனுடைய ஒழுக்கக் கேடுகளைப்பற்றிப் பின்னுல்தான் எனக்குத் தெரியவந்தது. முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் அவனேடு நான் முகங்கொடுத்துப் பேசியிருக்கமாட்டேன். தெரியாமல்தான் பேசினேன், கள்ளங்கபடமற்றுதான் பேசினேன். எங்கள் வீட்டிலேயே இருந்து படித்தவன். என்னைக் குழந்தைப் பருவமுதலே எடுத்து வைத்துக் கொண்டு விளையாடியவன், என்னைத் தன் தங்கையைப் போல்—தன் பெண்ணைப்போல எண்ணிப் பேசுகிருன் என்ற நம்பிக்கையோடுதான் நான் அவனேடு பேசி வந்தேன்.

அப்படி பேசி வந்ததை அந்தக் கயவன் — திருமணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாக இருப்பவன் அவனிடம் நான் காதல் கொண்டிருக்கிறேன் என்று எண்ணிக்கொண்டான்போலும்! ஒருநாள் நான் மட்டும் தனியே வீட்டில் இருந்தபோது அவன் வந்தான். என் பெயரிட்டு அழைத்து, 'அம்மா இல்லையா?' என்று கேட்டான். 'இல்லை நான்காவது வீட்டிற்குப் போயிருக்கிருர்' என்று நான் சொன்னதும், திரும்பிப்போய் வாயிற் கதவைத் தாளிட்டான். தாளிட்டு விட்டு வந்து வெறி பிடித்தவன் போல் என்னைப் பிடித்தான். அவன் பிடியிலிருந்து திமிரி விடுபட்டு சமையல் அறைக்குள் ஓடினேன். ஓடி விறகுக்கட்டைஒன்றைஎடுத்து வந்து, 'சீ! நாயே போ! போய்விடு" என்று விரட்டினேன். அவன் பேசாமல் திரும்பிப் போய்விட்டான். போனவன் சிறிது நேரத்திற்குப்பின் தன் அருமை அக்காளுடன் (என் தாயுடன்தான்!) வந்தான் வந்தவன் "கொஞ்ச நேரத்திற்குமுன் இங்கே வந்திருந்தேன் அக்கா! குழந்தையிலிருந்து என் தோளில் தவழ்ந்து வளர்ந்தவளாயிற்றே என்று அன்போடு, இவளைப் பிடித்து ஆசையோடு இப்படி ஒரு முத்தம் கொடுக்கலாம் என்று பார்த்தேன். ஆனுல் இவளோ திமிரி ஓடி விறகுக் கட்டையை எடுத்துவந்து என் தலையைப் பிளக்கப்பார்த்தாள்!" என்று


# கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன சிறந்த முறையில் நடந்துவரும் இந்த அலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி-8

**தாராபுரம்.**

கோவை மாவட்டம்

# காஞ்சி

அறிஞர் அண்ணா
அவர்கள்
எழுதும்
முப்பாலும் முக்கனியும் கலந்த
முத்தமிழ்க் காவியங்கள்!
இயலில் —இசையில்— கூத்தில்
கதைகள்! கட்டுரைகள்!

அத்துடன்

அமைச்சர்கள்,
முன்னணித் தலைவர்கள்
தரும் அரசியல் விளக்கங்கள்!

கவிதைகள்! கார்டூன்கள்!
துணுக்குகள்!!

எல்லாமாகச் சேர்ந்த
இலக்கியத் தொகுப்பு'
எழிலான படைப்பு'!
விலை ஒரே ரூபாய்தான்!

3-ம் ஆண்டு மலர்!


சொல்லிக்கொண்டே, என் தாயின் எதிரிலேயே என்னை இறுகப்பற்றி என் கன்னத்தில் முத்தமிட்டான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த என் தாய் "மாமன் உன்னிடம் எவ்வளவு ஆசை வைத்திருக்கிறான். அவனைப்போய் விறகுக்கட்டையால் அடிக்கப் பார்த்தாயாமே! அடிப்பாவி எவ்வளவு பெரியவன் மாமன் அவனைப்போய் அடிக்கலாமா? நீ படித்த படிப்பெல்லாம் இதற்குத் தானா?" என்று என்னைக்கேட்டாள். நான் என்ன சொல்வேன்! கண் கலங்கி அழுதேன். இப்படிப்பட்ட ஒருத்திக்கா நான் மகளாக வந்து பிறக்கவேண்டும்! அய்யோ! விதியே!

நான் குழந்தையாக இருக்கையில் மாமன் என்னைத் தோளில் சுமந்திருக்கலாம். என்னைக் கட்டியணைத்திருக்கலாம். என் கன்னத்தில் முத்தமிட்டிருக்கலாம். ஆனால் பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் பதினாறு வயதுப் பெண்ணான என்னிடம் அவன் அப்படி நடந்துகொள்வதை ஒருத்தி பார்த்துக்கொண்டிருப்பதோடு மட்டுமன்றி, "அவன் உன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான்?" என்று சொல்வது? அவ்வாறு சொன்னவள் என் மாற்றாந்தாய் அல்லள்! என்னைப் பெற்ற தாய்! அய்யோ! இப்படியும் ஒரு தாய் இருப்பாளா? இருக்கிறாளே! என்ன செய்வது?

என் தாயைப் பற்றியும் என் தந்தையைப் பற்றியும் தெருவாரும் ஊராரும் பேசிக்கொள்ளுகின்ற பேச்செல்லாம் என் ஆருயிர்த் தோழி ஒருத்தியின் மூலம் என் காதுக்கு எட்டும், அவற்றையெல்லாம்கேட்டு நான் குன்றிப் போவேன், என்அப்பா எப்படி பல பெண்களோடு தொடர்பு கொண்டிருக்கிறாரோ, அப்படியே என் அம்மாவும் பல ஆண்களோடு நட்புக்கொண்டிருக்கிறாள் என்பதை அறியும்போதெல்லாம் என் நெஞ்சு புண்ணாகும். 'இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் நமக்குத் திருமணமாகிவிடும். திருமணமானதும் பெற்றோரை அடியோடு மறந்து கணவருடன் சென்று விடலாம்' என்றுதான் நாளைக்கடத்திவந்தேன். ஆனால் என் மாமன்—என் தாயின் முன்னாலேயே அன்று அப்படி நடந்துகொண்ட பின், வீட்டில் இருக்க எனக்குப் பிடிக்கவே இல்லை. அம்மாவின் எதிரிலேயே அப்படி நடந்துகொண்ட கயவன்—யாருமில்லாதபோது என்னிடம் எப்படி நடந்துகொள்வான்? என்று எண்

ணிப் பார்த்தேன். அந்த வீட்டில் இருந்தால் ஒழுக்கம் கெடத்தான் நேரும். அன்று அந்த அறிவிலி என்னிடம் நடந்துகொண்டதே ... என் ஒழுக்கத்தைக் கெடுத்தது போலத்தான்! ஒழுக்கம் கெட்டு உலகத்தில் வாழ்வதா? ஒழுக்கம் கெட்டு வாழ்வதைவிட சாவதே மேல் என்று துணிந்தேன். அந்தத் துணிவோடுதான் வீட்டை விட்டுப் புறப்பட்டேன். தொடர் வண்டியேறி முன்னூறு கற்கள் தூரத்துக்கு அப்பால் வந்துவிட்டேன்.

இருப்புப் பாதையில் வண்டி வரும் போது தலைவைத்துப் படுத்து உயிரை விடுவது என்ற முடிவோடு இருப்புப் பாதைப் பாலம் ஒன்றின் அருகில் நான் அமர்ந்திருந்தேன். அந்த மாலை நேரத்தில் இருப்புப் பாதை ஓரமாகவே நடந்து வந்த நடுத்தர வயதுடைய ஒருவர், என்னைக் கண்டு ஐயுற்று என் அருகே வந்து 'யார் அம்மா நீங்கள்? ஏன் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள்?' என்று வினவி, 'என்னை உன் உடன் பிறந்த அண்ணனாக எண்ணி உன் துயரத்தைச் சொல்லம்மா!' என்று பரிவோடு கேட்டு, என் கதை முழுவதையும் அறிந்து எனக்கு அறிவுரை பலவும் கூறி 'குழந்தையில்லாத எங்களுக்குக் குழந்தையாக, வந்து எங்கள் வீட்டில் இரு அம்மா' எனச் சொல்லி என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அவரைப போலவே அவருடைய மனைவியும் என்பால் பேரன்பு காட்டி என்னைப் போற்றினார். அந்த வீட்டிற்குச் சென்ற சில நாட்களுக்குள் நான் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகி விட்டேன். அந்த அண்ணனோடும் அண்ணியோடும், அவர்களுடைய அன்பில் திளைத்து வாழும் பேறு பெற்றதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன் பூரித்தேன்.

அந்த அண்ணனும் அண்ணியும் எவ்வளவு பண்பட்ட மனமுடையவர்கள்! எவ்வளவு உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்கள்! எவ்வளவு பரந்த அருள்நோக்கு உள்ளவர்கள்! எவ்வளவு கனிந்த அன்பு நிறைந்தவர்கள்! என்பதை உணர உணர நான் நரகத்திலிருந்து விடுபட்டுச் சொர்க்கத்துக்கு வந்துவிட்டதாக எண்ணினேன்! திருமணம் ஆன பின்னரும் கூட கணவருடன் வந்து அண்ணனோடும் அண்ணியோடுமே என்றென்றும் இருக்கவேண்டும் என திட்டமிட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் ஐந்தாறு நாட்களுக்கு முன் வேலைக்காரி என்னிடம் சொல்லிய செய்தி என் திட்டத்தைக் குலைத்து விட்டது. 'அம்மா! நீங்கள் இந்த வீட்டுக்கு வந்து ஆறுமாதம் ஆகிறது. குழந்தையில்லாத வீட்டில் குழந்தையாக வந்து சேர்ந்திருக்கிறீர்கள்! ஆனால் இந்தத் தெருவில் இருப்பவர் என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா? அம்மா! அதைச் சொல்லக்கூட என் நா கூசுகிறது. அப்படிச் சொல்பவர்கள் வாய் புழுத்துத்தான் போகும்!' என்று வேலைக்காரி என்னிடம் அண்ணிக்குத் தெரியாமல் மெல்லக் கூறினாள். 'தெருவில் இருப்பவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? என்ன பேசிக் கொள்கிறார்கள்?' என்று நான் கேட்டேன். 'அவருக்குப் பெண்ணாசை பிடித்துவிட்டதாம். அதனால்தான் அறியாத பெண்ணான உங்களை எங்கிருந்தோ கடத்திக்கொண்டு வந்து தன் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறாராம்!' என்றாள் அவள். அந்தச் சொற்களைக் கேட்டதும் நெருப்பை மிதித்தவள்போல் துடித்தேன். 'அய்யோ! அண்ணா! சாக இருந்த என்னை அழைத்துவந்து உங்கள் உடன்பிறந்த தங்கையாக எண்ணிப் போற்றி வருகிற உங்கள்மீது இப்படி ஒரு பழிச்சொல் ஏற்பட வேண்டுமா? உங்கள் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கப்படுவதா? எல்லாம் என்னால்தானே!' என்று எண்ணி எண்ணி மனம் நொந்தேன்.

என் அண்ணனின் ஒழுக்கத்திற்கு மாசு கற்பிக்கப்படுவதைப பார்த்துக் கொண்டு நான் வாழ விரும்பவில்லை. ஆறு திங்கள் என் அண்ணனோடும் அண்ணியோடும் வாழ்ந்தேனே அதுவே போதும்! இன்னும் இரண்டொரு நாட்களில் அண்ணனின் வீட்டை விட்டுப் புறப்பட்டு, எங்கேனும் நெடுந்தூரத்துக்கு அப்பால் போய், என் கதையை நானே முடித்துக்கொள்வது என்று துணிந்து விட்டேன்.

என் பெற்றோரைத் துறந்து புறப்பட்டபோது செத்துப்போவது என்ற துணிவைத் தவிர என் நெஞ்சில் எந்தவகையான விருப்பமும் இல்லை. ஆனால் இன்று அந்தத் துணிவோடு எனக்கு ஓர் ஆசையும் இருக்கிறது! உயிர் ஓர் உடலை விட்டுப் பிரிந்ததும் வேறோர் உடலில் போய்ப் புகுந்துகொள்கிறது என்கிறார்களே அதாவது மறு பிறப்பு என்று ஒன்று இருப்பதாகச் சொல்கிறார்களே அது உண்மையானால், நான் அந்த அண்ணனின் வீட்டில் குழந்தையாகப் பிறக்கவேண்டும். பிறந்து அந்த அண்ணனின் அண்ணியின் அன்பிலே மூழ்கி வளரவேண்டும். அவர்களுடைய மடியிலே தவழ்ந்து சிரித்து விளையாடி அவர்களை இன்புறுத்தவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். என்னுடைய ஆசை நிறைவேறுமா? என் ஆசையை இறைவன் நிறைவேற்றுவானா?

* * *

கதையைப் படித்து முடித்ததும் நண்பரைப் பார்த்தேன். 'கற்பனை புதுமையாக இருக்கிறது! இதனை எழுதியவர் யாரோ?' என்று வினவினேன். கற்பனைக் கதையல்ல, அது நிகழ்ந்த கதை!' என்றார் என் நண்பர், 'நிகழ்ந்த கதையா?' என்று வியப்போடு கேட்டேன். 'ஆமாம்! அதை எழுதிய பெண் இறந்து ஓராண்டு ஆகிறது. அந்தப் பெண் யார்? அவளுடைய பெயர் என்ன? எந்த ஊர்? என்ற விவரம் ஒன்றுமே தெரிந்துகொள்ள இயலவில்லை. இந்த ஊருக்குப் பக்கத்தே உள்ள வயற்புறத்துக் கிணற்றில் பெண்ணின் பிணம் ஒன்று மிதப்பதாகச் செய்தி கேட்டு, காவலர் இருவருடன் விரைந்தேன். பிணத்தை எடுத்து கரை சேர்த்துப் பார்த்த போது அவளுடைய சேலைத் தலைப்பில் இருந்த முடிப்பில் நீர்ப்புக இயலாத உறை ஒன்றில் இந்தக் குறிப்பேடு மடித்து வைக்கப்பட்டிருந்தது. இதைப் படித்துப் பார்த்ததும் அந்தப் பெண் தற்கொலைதான் செய்து கொண்டிருக்கிறாள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அந்தப் பெண்ணின் தோற்றம், அவள் அணிந்திருந்த ஆடை ஆகியவற்றிலிருந்து அவள் ஒரு நகரத்துப்பெண் என்பதை மட்டுந்தான் அறிந்து கொள்ள முடிந்தது! வேறு ஒன்றும் அறிய முடியவில்லை!' என்றார் என் நண்பர். 'நிகழ்ந்த கதையா இது?' என்று நான் மீண்டும் வியப்போடு கேட்டேன். 'ஆமாம் நிகழ்ந்த கதைதான்!' என்று என் நண்பர் சோகத்தோடு சொன்னார்.

---

**முகப்பில்:**

**தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்**

எஸ். எம். துரைராஜ்
திருவள்ளூர்

எம். கோபால்
குன்றத்தூர்.

மு. வேதாசலம்
வண்ணாரப்பேட்டை,

நிமிர்ந்த நடை!
நேர்மைகொண்ட பார்வை!
வளையாத போக்கு!

இவை மூன்றும்தான்
உயிருள்ள வாழ்க்கை என்றான்
"சோமு"

ஆதரவு!
அனுசரணை!
நிலைக்கேற்ற நினைப்பு!

இவை மூன்றும் இல்லையென்றால்
வாழ்க்கையே இல்லை என்றான்
"முத்து"

## இக்கொள்கையை விளக்கும் படம்தான்!




டைரக்ஷன் A. காசிலிங்கம்

சென்னை:
சாந்தி (டீலக்ஸ் ஏர்கண்டிஷண்ட்) புவனேஸ்வரி, மகாராஜா
மற்றும் தென்னகமெங்கும்.


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.